# விவேகானந்தா

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)



**[ ISO 9001 : 2015 தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம் ]**

**(பெரியார் பல்கலைக்கழகத்தால் இணைவுபெற்றது &**

**பல்கலைக்கழக மானியக் குழுவால் 2(f) & 12 (b) தகுதி பெற்றது.)**

**வீராச்சிபாளையம், சங்ககிரி மேற்கு, சேலம் மாவட்டம்**

# தமிழ்த்துறை செய்தி மடல் (2022 – 2023)

### தமிழ்த்துறை சார்ந்த செய்திகள்

- விவேகானந்தா கல்வி நிறுவனம் 1992 – ஆம் ஆண்டு முதல் கல்விச் சேவையை மிகச் சிறப்பான முறையில் துவங்கி வரும் மிகப்பெரிய பெண்கள் நிறுவனமாகும்.
- இந்நிறுவனத்தில் விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி இரு கல்லூரி தமிழ்த்துறையில் இளங்கலை (2003), முதுகலை (2006), ஆய்வியல் நிறைஞர் (2009) மற்றும் முனைவர் பட்ட(2011) ஆய்வு மாணவிகள் பயின்று வருகின்றனர்.
- மாணவிகளின் எதிர்காலத்திற்கு ஏற்றவாறு அவர்கள் அறிவினைப் பெறும் வகையில் பாடம் தொடர்பான சிறப்புச் சொற்பொழிவு, ஊக்கச் சொற்பொழிவு, தேசிய, பன்னாட்டுப் பயிலரங்கம் உள்ளிட்ட நிகழ்வானது நடைபெற்று வருகின்றது.
- **திருக்குறள், தொல்காப்பியர், சித்தர், விவேகானந்தர்** ஆகிய ஆய்வு மன்றங்கள் அமைத்து மாணவிகளின் ஆராய்ச்சித் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் நடைபெறுகிறது.
- தமிழ் மாணவிகளும் கணினித்துறையில் திறமையுடன் செயல்படும் வண்ணம் ஆய்வகங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டு தமிழ் மற்றும் ஆங்கில முறையில் தட்டச்சு பயில்விக்கப்படுகிறது.
- மாணவிகளை வெளிக்கல்லூரிகளில் கவிதை, கட்டுரை, பேச்சு உள்ளிட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்ள வைத்தல்.
- மாணவிகளின் தனித்திறன்களை வெளிக்கொணரும் வகையில் **ஆய்வுக்கட்டுரை வாசித்தல், பட்டிமன்றம், கவியரங்கம், நாடகம், பாடல் இசையரங்கம், மேடைப்பேச்சு, விவாத மேடை, நூல் விமர்சனம், நாட்டுப்புற நடனம், சிறுகதை படைப்பாக்கம்** போன்றவை வாரந்தோறும் வெள்ளிவட்டம், முத்தமிழ் மன்ற விழா நிகழ்வாக நடத்தப்படுகின்றன.
- மாணவிகளின் திறன் வளர்க்க கருத்தரங்கம், பயிலரங்கம் முத்தமிழ் மன்றப் போட்டிகள், சிறப்புச் சொற்பொழிவுகள், ஆய்வுத்தேடல், வெள்ளிவட்ட நிகழ்வுகள் ஆண்டாள் திருக்கல்யாணம், திருமுறை முற்றோதுதல், கல்விச்சுற்றுலா, சான்றிதழ் படிப்பு (நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள்) ஆகியன நிகழ்த்தப்பட்டு வருகிறது.

### தமிழ்த்துறையின் தனிச்சிறப்புகள்

- ஒவ்வொரு மாணவியரின் மீதும் தனிக்கவனம்
- ஆராய்ச்சி முறையிலான கற்பித்தலின் மூலம் மாணவிகளை அடுத்தக்கட்ட வளர்ச்சிக்குத் தயார்படுத்துதல்.
- அனுபவம் மற்றும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
- அரசுத்தேர்வில் வெற்றிபெறுவதற்கான கற்றல் கற்பித்தல் முறைகள்.
- பல்நோக்கு நவீன வகுப்பறைகள்.
- இளங்கலை மற்றும் முதுகலை படிக்கும்போதே தொல்லியல், கல்வெட்டியல், ஓலைச்சுவடியியல், இதழியல், கணினித்தமிழ், யோகா போன்றவற்றை ஆராய்ந்து படித்தல்

### வேலைவாய்ப்புகள்

- பதிப்புத்துறையில், இந்து அறநிலைத்துறையில் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி
- எல்லாவிதமான அரசுப்போட்டித் தேர்வுகளிலும் தமிழே பிரதானமாக இடம் பெற்றுள்ளது.
- TET, TRB, SLET, NET, TNPSE - போன்ற துறைசார் பள்ளி, கல்லூரி அரசு ஆசிரியர் பணிகளில் எளிதில் வெற்றி பெறும் வாய்ப்பு.
- செய்தி வாசிப்பு, நிகழ்ச்சித் தொகுப்பு போன்ற வானொலி, தொலைக்காட்சி, ஊடகப் பணிவாய்ப்பு.
- செய்தித்தாள் துறையில் எழுத்தாளர் மற்றும் பதிப்புத்துறை பணிவாய்ப்பு.
- அரசு எழுத்தர் மற்றும் தட்டச்சுப் பணிவாய்ப்பு.




## தேசியக் கருத்தரங்கம்

01.06.2022 அன்று “தமிழ் இலக்கியங்களில் தமிழர் பண்பாடு” எனும் தலைப்பில் கருததரங்கம் நடைபெற்றது.

## கல்வெட்டியல் பயிலரங்கம்

15.09.2022 அன்று முனைவர் ப.வேலம்மாள் , தென்காசி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக , முதல்வர், அவர்களால் ‘இதழியல் மற்றும் தகவல் தொடர்பியல்’ என்ற தலைப்பில் பயிலரங்கம் நடைபெற்றது.



## ஓலைச்சுவடியியல் பயிலரங்கம்




16.02.2023 அன்று திரு.இ.மாரியப்பன், வரலாற்றுக் கள ஆய்வு மையத்தின் இயக்குநர், திருநெல்வேலி ‘கல்வெட்டியல்’ என்ற தலைப்பிலும், 21.02.2023, 22.02.2023 அன்று முனைவர்எம்.கே.கோவைமணி,இணைப்பேராசிரியர், தஞ்சைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்களைக் கொண்டு ‘ஓலைச்சுவடியல்’ என்ற தலைப்பிலும் பயிலரங்குகள் நிகழ்த்தப்பட்டன.

## பாரதியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டி




தமிழ்த்துறை மாணவிகளின் ஆய்வுத்திறன்களை வெளிப்படுத்தும் வகையில் 12.10.2022, 20.10.2022 அன்று தொல்காப்பியம், நன்னூல் குறித்த கட்டுரைகள் வழங்கி ஆய்வரங்கம் நடைபெற்றன

## முத்தமிழ் மன்றப் போட்டிகள்




14.11.2022 அன்று மாணவிகளின் தனித்திறன்களை வெளிப்படுத்தும் நோக்கில் இயல், இசை, நாடகம் என முத்தமிழ் சார்ந்து முத்தமிழ் மன்ற துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பேசும் பூங்காற்று திருமதி கவிதாஜவகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு இயல், இசை, நாடகம் குறித்து சொற்பொழிவாற்றினார்.



## சிறப்புச் சொற்பொழிவு

26.10.2022 அன்று சிலம்புச் செல்வி வே.செவ்வந்தி, முனைவர் பட்ட ஆய்வாளர், சென்னைப் பல்கலைக்கழகம், அவர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது

## போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு

10.11.2022அன்று திரு.அ.முத்துக்குமார், அரசு போட்டித் தேர்வு பயிற்சியாளர், அரசின் வருவாய்த்துறை அதிகாரி ‘போட்டித் தேர்விற்கான பயிற்சியை’ வழங்கினார்.




## கல்விச் சுற்றுலா











- 29.09.2022 அன்று ஈரோடு பவானி சாகர் அணை
- 17.02.2023 அன்று தாரமங்கலம் கைலாசநாதர் கோயில்
- 28.02.2023 அன்று கொடுமுடி மகுடேசுவரர் கோயில்

## கல்விச் சுற்றுலா

12.02.2023 அன்று தஞ்சைப் பெரியகோவில், சரஸ்வதி மஹால், திருச்சி மலைக்கோட்டைக்கும் கல்வி சுற்றுலாவாக சென்று வந்தனர்.




## உலக சாதனை நிகழ்வு



26.11.2022 அன்று தமிழ்நாடு, யாவரும் கேளீர் திறன் வளர் சங்கம் நடத்திய வினாடி வினா உலகசாதனை நிகழ்வில் தமிழ்த்துறை மாணவிகள் 62 நபர்கள் பங்கேற்று உலக சாதனை சான்றிதழ் பெற்றுள்ளனர்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

மெய்நிகர் அறிவியல் தமிழிருக்கை, சவுதி அரேபியாவுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நடைபெற்ற நுண்பயிலரங்கில் 5 மாணவிகள் இணைய வழி வகுப்பினை எடுத்துள்ளனர். மேலும், 2 மாணவிகள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.



## பாரதியார் நினைவு தினப் போட்டிகள்




12.09.2022, 15.12.2022 அன்று பாரதியார் நினைவு தினம் மற்றும், பாரதியார் பிறந்த தின நிகழ்வில் பாரதியார் வேடம் அணிந்து 100 மாணவிகள் அவரின் கவிதைகளை எடுத்துரைத்து ஊர்வலமாக வந்தனர். பேச்சு, கவிதை, பாட்டு, ஓவியம், நாடகம், ஓவியம் உள்ளிட்டப் போட்டிகள் நடைபெற்றன.

## மூலிகைக் கண்காட்சி

9.11.2022 அன்று மூலிகைக் கண்காட்சி நடைபெற்றது. இதில் தமிழர்களின் மூலிகை மருத்துவ முறைகள் குறித்து திரு.ச.ஈஸ்வரன் எடுத்துரைத்தார்.



## மாணவியின் நூல் வெளியீடு



முதுகலைத் தமிழிலக்கிய இரண்டாமாண்டு மாணவி சீ.கீர்த்திகா அவர்கள் ‘முடிவில்லா பயணம்’ என்ற கவிதை நூலினை தேசிய தர மதிப்பீட்டு எண்ணுடன் வெளியிட்டுள்ளார்.

## நவராத்திரி கொலு பூசை

04.10.2022 முதல் 12.10.2022 வரை ஒன்பது நாட்கள் நடைபெற்ற நவராத்திரி கொலு பூசையில் அனைத்து துறை மாணவிகளும் பங்கேற்றனர்.



## ஆண்டாள் திருக்கல்யாணம்




12.01.2023அன்று தமிழ்த்துறையில் நிகழ்த்தப்பட்ட ஆண்டாள், அரங்கநாதர் திருக்கல்யாண வைபவ நிகழ்வு.

## மாணவிகள் பேசிய பட்டிமன்றம்







- ❖ 05.12.2022 அன்று நடைபெற்ற இன்றைய தமிழ்ச் சமூகம் பெற்றதை இழந்ததா? இழந்ததைப் பெற்றதா என்ற தலைப்பிலான பட்டிமன்றம்.
- ❖ 08.03.2023 அன்று நடைபெற்ற இன்றைய பெண்களின் முன்னேற்றம் சோதனை நிறைந்ததா? சாதனை சூழ்ந்ததா? என்ற தலைப்பிலான பட்டிமன்றம்.

## மாபெரும் தமிழ்க் கனவு




30.03.2023 அன்று தமிழ் மரபும் தமிழர் பண்பாடும் என்ற நிகழ்வில் சேலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நிகழ்த்தப்பட்ட தமிழர் பெருமையை எடுத்துரைக்கும் நிகழ்வு நிகழ்த்தப்பட்டது. 'மாபெரும் தமிழ்க் கனவு ' தமிழ் மரபும் தமிழர் பண்பாடு குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் தமிழின் பெருமை போற்றப்பட்டது.

## பட்டைய வகுப்பு



17.12.20222 அன்று தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் செ.ஜெயந்தி அவர்களுக்கு தென்னிந்திய சமூகம் மற்றும் கலாச்சார நிறுவனம் சாதனையாளர் விருதினை வழங்கி சிறப்பித்துள்ளது. 30.01.2023 அன்று சேலம் வள்ளலார் அறக்கட்டளை வாயிலாக சொற்பொழிவு. புரிந்துணர்வு ஒப்பதத்தின் (MOU) வாயிலாக யாவரும் கேளீர் திறன் வளர் சங்கத்தின் மூலம் 63 நாயன்மார்கள் குறித்து பட்டய வகுப்பு எடுத்துள்ளார்.